09.03.2026

O.S.No.205/2024

DW1- திருமலைக்குமார் – த/பெ முத்தையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.03.2026.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( வாதி தரப்பில்)

15. 40 வருடமாக முடுக்கில் நான் வாசல் வைத்ததாக நான் தவறாகக் கூறுகின்றேன் என்றும் வழக்கு தாக்கல் செய்த பின் தான் நான் வாசல் வைத்தேன் என்றால் சரியல்ல.

16. நான் வாசலை பூசிவிட்டு வெள்ளை அடிக்காமல் வைத்திருந்தேன் என்றும் ஆணையர் வருவதால் சுவற்றிற்கு வெள்ளை அடித்து தயார் நிலையில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல.

17. தபசில் சொத்திற்கு கீழ்பக்கமும், மேல்பக்கமும் முடுக்கு உள்ளது என்றால் சரிதான்.

18. கீழ்பக்கம் உள்ள முடுக்கில் இரண்டு வீட்டிற்கு இடையில் தான் மாடிப்படிக்கட்டு உள்ளது என்றால் சரியல்ல.

19. முடுக்கின் வடக்கு பக்கம் மேற்கு நோக்கி கோடி உள்ளது என்றால் இல்லை.

20. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிழக்கு பக்க எல்கையாக திருமலையம்மாள் தற்போது சுப்பையா மூப்பனார் இடத்திற்கு என உள்ளது என்றால் சரியல்ல சுவற்றிற்கு கிழக்கு என உள்ளது. நான் வழக்கிற்காக

தவறாகக் கூறுகின்றேன் என்றும் திருமலையம்மாள் தற்போது சுப்பையா மூப்பனார் இடத்திற்கு என உள்ளது என்றால் சரியல்ல.

21. சர்வே எண்.152/10 க்கும் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் எந்த அனுபவமும், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

22. என் தகப்பனார் பெற்ற கிரையம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான்.

23. வேலாயுத நாடாரை நான் நேரடியாக பார்த்ததில்லை என்றால் சரியல்ல பார்த்துள்ளேன்.

24. எனக்கு தபசில் சொத்தை யார் யார் அனுபவம் செய்தார்கள், யார் யாருக்கு பாத்தியமானது என்று நேரடியாகத் தெரியாது என்றால் சரியல்ல.

25. திருமலையம்மாளுக்கு தபசில் சொத்து பாத்தியமானது என்பதை காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

26. மாடசாமி மூப்பனார், மகாலிங்க மூப்பனார், கருணைஆனந்த வேளாளர் ஆகியோர் சொத்துக்களை எவ்வாறு அனுபவம் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் கிரையத்தின் அடிப்படையில் அனுபவம் செய்தனர்.

27. கருணைஆனந்த வேளாளர் மகன் வேலாயுத வேளாளருக்கு என் அப்பா முத்தையா கிரையம் கொடுக்கும் போது 2ம் தபசில் சொத்தை அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

28. என் குடும்பத்தாருக்கோ, என் முன் கிரையதாரருக்கோ பிராது தபசில் சொத்தைப் பொறுத்து எந்த உரிமையோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல.

29. வருவாய் ஆவணங்களும், பட்டாவும் தபசில் சொத்திற்கு இல்லை எறன்றால் சரியல்ல பட்டா உள்ளது.

30. பிராது 2ம் தபசில் சொத்து என் அனுபவத்தில் இருப்பதாக தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

31. நான் 2ம் தபசில் சொத்து உரிமையாளர் என விளம்புகை செய்ய எதிரிடை கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

32. என் தகப்பனார் காலி மனையாக தான் தபசில் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல.

33. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் என் தந்தை வாங்கிய கிரைய பத்திரத்தில் valuation Slip இருந்திருக்கும் அவ்வாறு இல்லாததால் என் தகப்பனார் காலி மனையாகத் தான் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல.

34. நான் வீடு கட்டுவதற்கு வாங்கிய வரைபட அனுமதியில் என் வீட்டின் வாசல் எந்த பக்கம் இருக்கும் என வரைபட அனுமதியை பார்த்தால் துலங்கும் என்றால் சரிதான்.

35. தற்போது அந்த வீட்டில் யார் வசிக்கிறார்கள் என்றால் நானும், என் அம்மாவும் வசிக்கிறோம்.

36. என் அம்மா தான் அத்துமீறி மேற்கு நோக்கி கோடி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

37. என் தகப்பனார் பெற்ற கிரைய பத்திரத்தில் மேற்கே வாசல் இருப்பதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

38. எப்போது வருவாய் ஆவணங்கள் தவறாக இருந்தது எனக்கு தெரியும் என்றால் வழக்கு அழைப்பாணை வந்த பின்னர் தெரியும்.

39. வருவாய் ஆவணங்களில் உள்ள தவறை சரி செய்ய என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நீதிமன்றத்திற்கு வந்ததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

40. வருவாய் ஆவணங்கள் 2ம் வாதி சுப்பிரமணியனுக்கு சாதகமாகவே உள்ளது என்றும் எனவே வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

41. வாதியின் முன் கிரையதாரர்களை நான் நேரில் பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

42. சுப்பையா மூப்பனாருக்கு சொத்தை யார் அனுபவத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் வாதியின் அப்பா ஆறுமுகம், அவரின் வாரிசுகள் அனுபவம் செய்தார்கள்.

43. சுப்பையா குடும்ப விவரம் பற்றி எனக்கு முழுவதும் தெரியாததால் அவர்கள் எவ்வாறு அனுபவம் செய்தார்கள் என்றும் அவர்கள் எவ்வாறு கிரையம் கொடுத்தார்கள் என்றும் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல.

44. என் தாயாருக்கு வாதிகள் வாரிசு விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

45. என் தாயார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் வழக்கின் உண்மை நிலை தெரியும் என்பதால் அவர் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

46. சுப்பையா மூப்பனார் பெயரில் உள்ள பதிவு ஆவணம் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

47. தற்போது நான் தாக்கல் செய்துள்ள 3 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்ததால் தான் எதிர் வழக்குரையோடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

48. ஆணையர் அளக்கும் போதே ஆவணம் எதுவும் என் தரப்பில் காண்பிக்கவில்லை என்றும் மேலும் அளவீடு விவரம் அப்போதே

தெரிந்ததால் தான் தற்போது ஆணையர் அறிக்கை நான் ஆட்சேபனை மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல.

49. நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வருவாய் ஆவணங்கள் மற்றும் ஆணையர் அறிக்கையும் வாதிக்கு ஆதரவாக இருப்பதால் வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி